# මද්‍යසාර පාලනය පිළිබඳ ජාතික ප්‍රතිපත්තිය

# மதுபாவனைக் கட்டுப்பாடு தொடர்பான தேசிய கொள்கை

# National Policy on Alcohol Control

**2016**


සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය – ශ්‍රී ලංකාව

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு – இலங்கை

Ministry of Health, Nutrition and Indigenous Medicine – Sri Lanka

# மதுபாவனைக் கட்டுப்பாடு தொடர்பான தேசிய கொள்கை

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு – இலங்கை

**மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான தேசிய கொள்கையானது**
**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின்**
**அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் இல.1967/62,**
**2016ம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது.**

## உள்ளடக்கம்

1. அறிமுகம் 01

2. கடைப்பிடிப்பதற்கான முக்கிய ஒழுங்கு விதிகள் 02

3. நோக்கு 02

4. கொள்கைகள் 02

5. முன்னிலைப்படுத்தப்படும் கொள்கைப் பரப்புகள் 03

6. முன்னிலைப்படுத்தப்படும் கொள்கைப் பரப்புகளுக்கான மூலோபாயங்கள் 03

6.1. சந்தைப்படுத்தல் 03

6.2. விலை, வாணிபம், முதலீடு 04

6.3. மதுபான வகைகளின் கையிருப்பு, பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை தொடர்பான விடயங்கள் 05

6.4. மது பாவனையால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்து சமூகத்தின் எல்லா மட்டங்களையும் பாதுகாத்தல் 06

6.5. மது அருந்தியபின் வாகனம் செலுத்துதல், இயந்திரங்கள் இயக்குதல் 07

6.6. சமூக மட்ட நடவடிக்கைகள் 07

6.7. தகவல் சேகரித்தல், கண்காணித்தல், மதிப்பீடு, ஆராய்ச்சி 08

6.8. புனர்வாழ்வு அளித்தல், ஆதரவளிக்கும் பொறிமுறைகளை வலுப்படுத்தல் 09

6.9. மது உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளைக் கட்டுப்படுத்தல் 10

6.10. நிறுவன ஒழுங்கமைப்பும் நிதி நடவடிக்கைகளும் 10

7. ஒருங்கிணைப்புப் பொறிமுறை 11

8. கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் 11

9. நீடித்து நிலைக்கக்கூடிய முறையில் மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் 11

10. மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை அமுலாக்கம் செய்வதற்கான தேசிய உளநல உபகுழு 12

## 1.அறிமுகம்

மதுபாவனை பொதுமக்களின் நலனில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதோடு, நாட்டின் அபிவிருத்தி, வறுமை என்பவற்றில் செல்வாக்கு செலுத்தி, உலகளாவிய ரீதியாக மனித அழிவிற்கு பிரதான காரணமாகின்றது. மதுபாவனை தனிமனித, குடும்ப, சமூக மட்டங்களில் மட்டுமன்றி ஒட்டு மொத்தமாக ஒரு நாட்டின் அபிவிருத்தியிலும் கட்டுமானங்களிலும் பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்றது.

மிகக்குறைந்த, மத்தியதர வருமானமுள்ள நாடுகளில் மதுபாவனை இளவயது இறப்பு வீதத்தில் முதன்மை பெறுவதுடன், உலக நோய் பரம்பலில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் உள்ளது. மதுபாவனையால் ஏற்படுகின்ற நோய்கள், விபத்துக்கள் அடங்கலாக பட்டியலிடப்பட்டுள்ள 60 வரையான நோய்களிற்கு பிரதான காரணமாகின்றது. 200 வரையான ஏனைய நோய்களிற்கும், விபத்து சம்பந்தப்பட்ட காயங்களிற்கும் மதுபாவனையே காரணம் என உலக சுகாதார ஸ்தாபன 2004 ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகின்றது.

இலங்கையில் மதுபாவனையால் ஏற்படுகின்ற ஈரல்கருகல் நோய் (Cirrhosis) ஏற்படுத்துகின்ற மரணவீதம் ஆண்களில் ஒரு லட்சம் பேரில் 37.3 வீதமாகும்.(Global Health Observatory Data Repository, 2012).மதுபாவனை தற்கொலை மரணங்களுடன் மிகக் கூடிய அளவில் தொடர்புபட்டுள்ளது(ர.அபயசிங்க,2008).அத்துடன் திரு. பீ. சுப்பிரமணியம் & சிவயோகன்,2001: டி.சில்வா,சமரசிங்கே மற்றும் ஹங்வெல்ல(2011) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குடும்ப வன்முறை, வறுமை என்பவற்றிற்கு மதுபாவனை பிரதான காரணமாக கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் நோய்களால் ஏற்படுத்தப்படுகின்ற 10 இறப்புகளில் 07 இறப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. இதில் 04 வகைகள் மதுபாவனையுடனும் ஏனைய மூன்றும் புகைத்தலுடனும் முறையற்ற உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இன்மை என்பவற்றுடனும் தொடர்புடையனவாகும்.

இலங்கையில் தற்போதைய புள்ளி விபரங்களின் படி தினமும் ஆண்களில் 39.6 சதவீதத்தினரும், பெண்களில் 2.4 சதவீதத்தினரும் மதுப்பழக்கத்திற்கு உட்பட்டுள்ளனர்(தேசிய மதுபாவனை மதிப்பீடு-2012).மேலும் மதுபாவனையாளர்களின் எண்ணிக்கையும், சதவீதமும் அதிகரிக்குமானால், அது நோய் பரம்பலிலும் அதற்கான செலவீனத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் என Global Status Reports On Alcohol 2011 குறிப்பிடுகின்றது.

இந்தப் பின்னணியில் இலங்கைக்கான தேசிய மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கை வெளிவந்தால் இலங்கை அரசாங்கம் இது குறித்த செயற்திட்டங்களை வகுக்கவும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தொற்றா நோய்களால் ஏற்படுகின்ற மரணங்களை 25 சதவீதத்தால் 2025 ஆம் ஆண்டளவில் குறைப்பதற்கும் இது உதவியாக அமையும். இத்திட்டங்களின் கொள்கை விரிவாக்க செயற்பாடுகளிற்காக ஒழுங்குப்படுத்தப்பட்ட உயர்மட்ட அரச தலைவர்கள் மகாநாடு,2011 செப்டெம்பர் 21 இல் நடைபெற்ற போது அதில் எமது நாட்டு ஜனாதிபதியும் பங்கேற்றார்(UN-A/RES/66/2).

### சம்பந்தப்பட்ட கொள்கைகளும், சட்டங்களும்

01. தேசிய புகைத்தல், மதுபாவனை சட்டம் இல 27, 2006 (NATA ACT).

02. மதுவரி சட்டம் இல. 8/1912.

03. போதைப்பொருள் பாவனை தடுத்தலிற்கான இலங்கையின் தேசிய கொள்கை, 2005.

04. இலங்கை காவல்துறைச் சட்டம், 1984

## 2.கடைப்பிடிப்பதற்கான முக்கிய ஒழுங்கு விதிகள்

01. மது ஒழிப்பு நிகழ்ச்சியை பகிரங்கப்படுத்தலானது, முக்கிய சான்றுகளுடனும் பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

02. கொள்கைகள் வகுக்கப்படும் போது இன, மத, கலாச்சார அமைவுகளிற்கு ஏற்றதாக அமைய வேண்டும்.

03. இம்மது தொடர்பில் அதனை மற்றைய வியாபார விடயங்களோடு ஒப்பிடாமல் சமுதாய, பொருளாதார, சுகாதார அபிவிருத்திப் பாதையில் ஏற்படும் பாதகங்களையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

04. இது சம்பந்தப்பட்ட விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பொதுமக்கள், பல்துறை ஆளணியினர் உடன் சேர்ந்து நடாத்தப்படவேண்டும்.

05. பொதுச்சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் முக்கிய பங்கு கொடுக்கப்பட வேண்டும்.

06. மதுபான தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், சந்தைப்படுத்துபவர்கள், விற்பனையாளர்கள், மறைமுகமாக தொடர்புடைய யாவரையும் அபிவிருத்திக்காகவோ, கல்வி, பொருளாதார, சுகாதாரம் போன்ற எந்தவொரு துறைகளிலும் ,கொள்கைகளிலும் பங்குதாரிகளாகவோ இருப்பதை கட்டுப்படுத்தல்.

07. மதுபாவனையில் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போன்ற யாவரையும் பயனுடைய தடுப்பு, சிகிச்சையளிப்பு, சேவைகளிற்கும் சமூக மட்ட புனர்வாழ்வு செயற்பாடுகளிற்கும் உட்படுத்தல்.

08. தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுப்பாடுச்சபையின் (NATA) கொள்கைகளிற்கு அமைவாக மதுபாவனையை தடுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற சட்டங்கள் அமைய வேண்டும்.

09. சமுதாய பங்களிப்புடன் கொள்கை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் என்பன அமைய வேண்டும்.

10. அரசியல் உள்வாங்குதலுடன், பயனுடைய நடைமுறைப்படுத்தல் விடயங்கள் தேசிய மதுபாவனை கொள்கைக்குள் உள்வாங்கப்படுதல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## 3.நோக்கு

இலங்கை நல்லமுறையில் மதுபாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கிறது.

## 4.கொள்கைகள்

01. மதுவை உற்பத்தி செய்தல், பாவித்தல் என்பவற்றை இல்லாதொழித்தல்.

02. மதுபான வர்த்தகத்திலுள்ள பல விடயங்களை கருத்திற்கொண்டு விலைகள், வர்த்தக முதலீட்டு திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தல்.

03. இலகுவாக கிடைக்கக்கூடிய, பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளை கட்டுப்படுத்தல்.

04. வீட்டில், வேலைத்தளங்களில், பொதுமக்கள் கூடும் இடங்களில் மது பாவித்தலை கட்டுப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

05. மதுபாவனையில் ஏற்படுகின்ற வீதி விபத்துக்கள் உட்பட ஏனைய விபத்துக்கள், காயங்களை கட்டுப்படுத்தல்.

06. சமூக விழுமியங்களை பொதுமக்கள் மத்தியில் ஆழப்படுத்துவதன் ஊடாக மதுபாவனையை குறித்த எதிர்மறையான எண்ணங்களை ஏற்படுத்தல்.

07. மதுபாவனையில் ஏற்படுகின்ற, தீய விளைவுகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதோடு, ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதன் தாக்கத்தை கண்டறிதல்.

08. சமுதாய பங்களிப்புடன் இதற்கு சார்பான சேவைகள், புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

09. மதுபாவனை கட்டுப்பாடு, கொள்கை வகுப்புச்செயற்பாடுகளில் மது உற்பத்தி நிறுவனங்களின் செல்வாக்கு செலுத்துகையை கட்டுப்படுத்தல்.

10. நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் என்பவற்றிற்கு மதுபான கட்டுப்பாட்டுக் கொள்கையை தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுப்பாட்டுக் கொள்கையுடன் ஒத்திசைவாக செயற்படுத்தல்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள, கொள்கைகளை அடைவதற்கு பின்வருவன இனங்காணப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

## 5.முன்னிலைப்படுத்தப்படும் கொள்கைப் பரப்புகள்

01 சந்தைப்படுத்தல்.

02 விலை, முதலீடு, வாணிபம்

03 மதுபான வகைகளின் கையிருப்பு, பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை தொடர்பான விடயங்கள்.

04 மதுபாவனையால் ஏற்படும் தீய விளைவுகளில் இருந்து சமூகத்தின் எல்லா மட்டத்தினரையும் பாதுகாத்தல்.

05 மது அருந்தியபின் வாகனம் செலுத்துதல், இயந்திரங்களை இயக்குதல்.

06 சமுதாய செயற்பாடுகள்.

07 வழிமுறைகளை கண்காணித்தல், மதிப்பீடுசெய்தல், ஆராய்ச்சிக்கு உட்படுத்தல்.

08 ஆதரவு, புனர்வாழ்வு தளங்களை வலுப்படுத்துதல்.

09 மதுபாவனை உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளை கட்டுப்படுத்தல்.

10 நிறுவன ஒழுங்கமைப்பு, நிதி வழங்குதல்.

## 6.முன்னிலைப்படுத்தப்படும்,கொள்கைப்பரப்புகளுக்கான மூலோபாயங்கள்

### 6.1 சந்தைப்படுத்தல்.

**மூலோபாயம்: மதுபாவனை குறித்து விளம்பரப்படுத்துதல், ஊக்குவித்தல் சந்தைப்படுத்தலை நேரடியாகவோ மறைமுகமாவோ இல்லாமல் செய்தல்.**

- மதுபாவனை குறித்த விளம்பரங்கள், சமூக செயற்பாடுகளிற்கான ஆதரவு, அனுசரணை வழங்குதல் போன்றவற்றை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாட்டு சபையின் ஊடாக கையாழுதல்.

- புதிய சட்ட விதிமுறைகளும், நடைமுறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு இதனூடாக வியாபார விளம்பரங்கள், ஏனைய வழி ஊக்கப்படுத்துதல் (இணையம்,CSR,தனியார் நிகழ்வுகள்), சமூக செயற்பாடுகளிற்கு மது உற்பத்தி நிறுவனங்களின் அனுசரணை, பொது இடங்களில் விளம்பரப்படுத்தல் என்பவற்றை கட்டுப்படுத்தல்.

- புதிய கொள்கைகள், சட்டவிதிமுறைகள் என்பவற்றின் ஊடாக திரைப்படங்கள், நாடகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாக பொதுமக்களிற்கு விளம்பரப் படுத்தப்படக்கூடிய சகல மதுபாவனை சம்பந்தப்பட்ட காட்சிகளை கட்டுப்படுத்துவதற்கு இவற்றின் தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள்,எழுத்தாளர்கள் போன்றவர்களிற்கு அறிவூட்டுதல்.

- வெளிப்படைத்தன்மையுடன் கூடிய கண்காணித்தல், சந்தைப்படுத்தல், பொறுப்புக்கூறல் என்பவற்றுடன் பொதுமக்களின் முறைபாடுகளைப் பெற்றுக்கொள்ளுதல், அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை விரிவாக்கம் செய்தல்

- மதுபான பொருட்களை சந்தைப்படுத்தலில் கண்டுபிடிக்கப்படுகின்ற சட்டத்திற்கு விரோதமான செயற்பாடுகளை தீவிரமாக கண்காணிப்பதுடன், அதற்கான தண்டப் பணத்தையும் அதிகரித்தல்.

- மதுபான போத்தல்களில் விளம்பரப்படுத்தப்படுகின்ற விளம்பரங்களில் மதுபாவனையின் நன்மைகள் குறிப்பிடப்பட்டு தீமைகள் குறிப்பிடும் போது ஒப்பீட்டு ரீதியாக மற்றையவற்றை விட ஆபத்து இல்லை அல்லது குறைவு போன்ற பிழையாக வழிகாட்டக்கூடிய எந்தவகையான சொற்களையோ, படங்களையோ பிரசுரிப்பதை தடுப்பதற்கான சட்டங்கள்,நடைமுறைகளை வகுத்தல்.

### 6.2 விலை, வாணிபம், முதலீடு

**<u>மூலோபாயம்</u> : தீமை ஏற்படுத்தக்கூடிய மதுபாவனை நுகர்வை கட்டுப்படுத்துவதற்கு விலை, வாணிபம், முதலீட்டு கொள்கைகள் என்பவற்றில் உள்நாட்டு இறைவரிக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்தல்.**

- மதுபான உற்பத்திகளிற்கான விலையை அதிகரித்தல், மதுவரியை அதிகரித்தல் ஊடாக இறைவரி திணைக்களத்திற்கான வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் தீய விளைவுகளை ஏற்படுத்தும் அளவில் குடிப்பதை கட்டுப்படுத்தல். இதற்கு உலகளாவிய ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விஞ்ஞான பூர்வமான கொள்கையை கடைப்பிடித்தல்.

- மதுபாவனை வகைகளிற்குரிய விலையேற்றதை எவ்வித தடையும் இன்றி பொதுமக்கள் அறிவதற்கான செயற்திட்டங்களை வகுப்பதோடு, விலையேற்றத்துடன் மதுபான வகைகளின் கொள்ளளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தல்.

- மதுபான வகைகளை தயாரிப்பதற்காக அறவிடப்படுகின்ற BOI வரிச்சலுகையை உற்பத்தி, விநியோகம், விற்பனை என்பற்றில் இலங்கையில் நடைமுறைப்படுத்தபடாமல் இருத்தல்.

- தீர்வை அற்ற மதுபான விற்பனையைத் தடைசெய்தல்

- வெளிநாட்டு மதுபான வகைகளின் இறக்குமதி, விற்பனை என்பற்றில் நாடுகளிற்கு இடையில் இருக்கின்ற வர்த்தக நல்லுறவு ஒப்பந்தங்கள் எமது மதுபாவனை தொடர்பான கொள்கைகளிற்கு பாதகமாக இருக்காத வகையில், உடன்படிக்கைகள் கைச்சாத்து இடப்பட வழிகோலுதல்.

- மதுபான வகைகளை தயாரிப்பதற்கான இரசாயனங்களை(உ+ம் ஸ்பிரிட் வகை) இறக்குமதி செய்யும் போது மிக அவதானத்துடன் இருப்பதோடு அவை முறைகேடாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த வழிகோலுதல்.

**6.3 மதுபான வகைகளின் கையிருப்பு, பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை தொடர்பான விடயங்கள்.**

**<u>மூலோபாயம்</u> : 1. மதுபாவனையற்ற ஒரு சமூகத்தை உருவாக்கும் உயர்ந்த நோக்கில் அவற்றின் கையிருப்பு, கிடைக்கும் வழிமுறைகள் என்பவற்றை நீண்டு நிலைக்கக்கூடிய முறையில் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளினூடாக மதுபாவனையில் ஏற்படுகின்ற நுகர்வோருக்கான தீவினைகளை கட்டுப்படுத்தல்.**

- இலங்கையிலுள்ள மதுபான வகைகளின் தூய மதுபான கொள்ளளவினை ஒரு குறிப்பிட்ட வரையறையில் வைத்து அவ்வளவினை குறைந்தது பத்து வருட காலப்பகுதியிலாவது கட்டுப்படுத்துவதற்கு ஏதுவான செயற்திட்டங்களை வகுத்தல்.
- பொதுமக்களின், நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி என்பவற்றிற்கு தடையாக உள்ள மதுபாவனையை குறைப்பதற்கு குறுகிய கால, நீண்டகால திட்டங்களை வகுத்து செயற்படுத்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டும்.

- தேசிய மது மற்றும் புகைத்தல்(NATA) தடுப்புச் சட்டத்திற்கு அமைவாக இருபத்தியொரு வயதிற்கு உட்பட்ட எவரும் மதுபான வகைகளை வாங்குவதற்கு தடைவிதித்தல்.

- உல்லாசப் பயணிகளின் தங்குமிடங்களில் உள்ள மதுபான சாலைகளிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அவ்விடயங்கள் பொதுமக்கள் செறிந்து வாழாத, நடமாடாத இடங்களாக இருப்பதை உறுதிப்படுத்திய பின்னரே அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதலை உறுதிப்படுத்தல்.

- உதாரணமாக ஒரு விழாவிற்கான நுழைவுக்கட்டணத்தை மதுபோத்தல் ஒன்றை கொள்வனவு செய்வதன் மூலமாக இலகுவாக பெற்றுக்கொள்ளலாம் போன்ற சலுகைகளை இரத்துச் செய்தல்.

- மதுபான சாலைகளின் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளில் பொதுமக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி அதன் மூலமாக பொது மக்களின் நலனிலும், பாதுகாப்பிலும் அக்கறை செலுத்துதல்.

- தற்காலிக மதுபானசாலைகளிற்கான அனுமதியை இரத்துச் செய்தல்.

- சிறுவர்கள் அதிகம் நடமாடுகின்ற பொது மக்கள் கூடும் இடங்களில் உதாரணமாக:- பாடசாலை விளையாட்டு போட்டிகளில், மதுபானங்கள் விற்பதை தடைசெய்தல்.

- இளைஞர்களை கவரும், உள்ளீர்க்கும் விதமாக மதுபானங்கள் குறித்து வெளிவருகின்ற விளம்பரங்களை இரத்துச்செய்தல்.உதாரணமாகப் பழங்கள், ஏனைய மென்பானங்களிலும் குறிப்பிட்டளவு மதுசாரம் உண்டு என விளம்பரம் செய்தல்(Alcopops).

**<u>மூலோபாயம் 02</u> : அரசியலோ, வேறு எந்த தலையீடுகளும் இன்றி பொதுமக்களின் பங்களிப்புடன் கள்ளச்சாரயத்தை கட்டுப்படுத்துவதற்கான நீண்டு நிலைக்கக்கூடிய செயற் திட்டங்களை வகுத்தல்.**

- ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும், கள்ளச்சாரயம் தொடர்பான ஆக்கபூர்வமான செயற்திட்டத்தை உருவாக்கி அதனூடாகத் தகவல் சேகரித்தல்,ஆய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளை ஆரம்பித்தல்.
- சட்ட ரீதியாக எடுக்கும் நடவடிக்கைகளை பிராந்திய ரீதியில் உள்ள அரசு சார்பான நிறுவனங்களை ஒருங்கிணைத்து தகவல்களை பரிமாறுதல்.
- கள்ளச்சாரயம் உற்பத்தி செய்தல், கடத்துதல், விற்பனை செய்தல் தொடர்பான நபர்களிற்கான தண்டனைகளை அதிகரித்தல்.
- கள்ளச்சாராயம் கிடைக்கப்பெறும் இடங்களை கள்ளச்சாராயம் தொடர்பான முறைப்பாடுகளை விட அதிக கருத்தில்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கள்ளச்சாரயத்தை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது வெளித்தலையீடுகளின் தாக்கத்தை குறைக்க அனைத்து மட்ட நிர்வாக அமைப்புகளுக்கு உதவுதல்.
- சமூக மட்டத்தில் பணியாற்றுகின்ற சேவையாளர்கள், மதத்தலைவர்கள் ஊடாக கள்ளச்சாராய உற்பத்தி, விநியோகம், விற்பனை என்பவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளின் போது பாதுகாப்பை கொடுத்தல்.

**6.4 மதுபாவனையால் ஏற்படும் தீய விளைவுகளில் இருந்து சமூகத்தின் எல்லா மட்டத்தினரையும் பாதுகாத்தல்.**

**<u>மூலோபாயம்</u>** : பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்கள், வேலைத்தளங்கள், வீடுகளில் மது பாவிப்போர், பாவிக்காதோர் ஆகிய எல்லா பிரிவினரையும் மதுவால் ஏற்படும் தீய விளைவிலிருந்து பாதுகாப்பதற்கான வழி முறைகள்.

- மதுபாவனையால் ஏற்படுகின்ற வீட்டுவன்முறை, வீதிவிபத்துக்கள் என்பவற்றை குறைப்பதற்கான, பொருத்தமான சட்டவிதிகள் நிர்வாக முறைமைகளை வலுப்படுத்தல்,மற்றும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தல்.
- சட்ட விதிமுறைகள் மூலம் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் மதுபாவனையைக் கட்டுப்படுத்தல்.
- மதுவிற்கும் வன்முறைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதால் வன்முறைகள்,சிறுவர் துஷ்பிரயோகம், தற்கொலை முயற்சிகளைக் குறைப்பதற்கு பொருத்தமான எல்லா கொள்கைகள், செலவுத்திட்டங்களையும் ஒருங்கிணைத்து கருத்தில்கொண்டு செயற்படுத்தல்.
- மருத்துவ, சுகாதார துறை சாராத அமைப்புக்கள் மூலம் தனக்கும், ஏனையோருக்கும் தீங்கிழைக்கக்கூடிய மதுபாவனையாளர்களை இனங்கண்டு அவர்களை சிகிச்சைக்கு உட்படுத்துதல், இதற்கு சமூகசேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள், பெண்கள் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரை பொது இடங்களிலும், வேலைத்தளங்களிலும் பயன்படுத்தல்.

- பொது நிதியினை, அரச, பொது நிகழ்வுகளில் மதுபாவனைக்கு செலவிடுவதை நிறுத்துதல்.

- பொது இடங்களிலும், வேலைத்தளங்களிலும் மதுபாவித்தல் கண்டுபிடிக்கப்பட்டால், அது பொருத்தமான சட்டங்கள் மூலம் உரிய நபரிற்கான தண்டனைகள் வழங்குதல்.

- மது விற்பனை செய்யும் நிலையத்தில் உள்ள தொழில் தருனர், தொழிலாளிகள் அதிக அளவு மது அருந்துவோரை இனங்கண்டு மேலும் அவர்களுக்கு மது வழங்குவதால் ஏற்படும் பக்க விளைவுகளை கருத்தில் கொண்டு அவ்வாறு மது வழங்காமல் இருக்க பொறுப்பு எடுத்தல் வேண்டும்.

## 6.5 மது அருந்திய பின் வாகனம் செலுத்துதல், இயந்திரங்களை இயக்குதல்

**<u>மூலோபாயம்</u> : குடித்து விட்டு வாகனம் செலுத்துதல், இயந்திரங்கள், பொறிகளை கையாளுதல் என்பவற்றை தடுத்தல்.**

- வாகனம் செலுத்தும் சாரதிகளின் இரத்தத்தில் அனுமதிக்கபட்ட மதுபான அளவினை விட அதிகமான அளவில் வாகனம் செலுத்துவதை அனுமதிக்காது இருத்தல்.

- தொடர்ச்சியான பரிசிலனைகள் மூலம் வாகன ஓட்டுநர்கள் மதுபாவனையுடன் வாகனம் செலுத்துவதை தடுத்தல்,கண்டுபிடித்தல் என்பவற்றிற்கான திறமையை காவல்துறையினர் கொண்டிருத்தல்.

- குடித்துவிட்டு வாகனம் செலுத்தும் போது . இரத்தத்தில் உள்ள மதுவின் அளவு அதிகரிப்புக்கான தண்டப்பணம் மற்றும் அதனால் ஏற்படுகின்ற விபத்துக்களில் காயப்படுபவர்களிற்கான இழப்பீட்டு கொடுப்பனவு, தண்டப்பணம் என்பவற்றிற்கான அறவீடுகளில் அதிகரிப்பை ஏற்படுத்தல்.

- விபத்துக்களின் பின்னர் அனுமதிக்கப்படும், காயக்காரர்களின் குருதி மாதிரியில், மதுபான செறிவை கண்டறிவதற்கான வசதிகளை வைத்தியசாலைகளில் ஏற்படுத்தல்.

- மதுபாவனையின் பின்னர், எந்தவொரு நபரையும் இயந்திரங்கள், பொறிகள் இயக்குவதை தடுத்தல்.

## 6.6 சமூக மட்ட நடவடிக்கைகள்

**<u>மூலோபாயம்</u> : மதுபாவனையற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்கோடு சமூகத்தில் உள்ள எல்லா பிரிவினரையும், ஈடுபாட்டுடன் செயற்பட வைத்து மதுபாவனை என்பது கவர்ச்சியான செயல் அல்ல என்ற எண்ணத்தை ஏற்படுத்துதல்.**

- மதுபாவனையால் ஏற்படுகின்ற வெளிப்படையாக தெரிகின்ற தெரியாத தீவினைகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதோடு, உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல், மொத்த விற்பனை என்பவற்றிற்கான சட்டவிதிமுறைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்துதல்.

- சமூகத்தில் எல்லா பிரிவினருக்குமான அறிவூட்டல்களில் முக்கியமாக மதுபான வகைகள் பாவிப்பது குறித்து ஊக்கமளிக்கப்படும் விதம், குறித்த காரணிகள் மது பாவிப்பதை தூண்டி, தொடர்ந்தும் குடிப்பதற்கு காரணமாக அமைகின்றது என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

- மதுபாவிக்க ஆரம்பித்தல், தொடர்ந்தும் பாவித்தல் அதனை கட்டுப்படுத்தல் என்பன குறித்த அறிவூட்டல்கள் சிறுவர்கள், இளவயதினர், மது பாவிப்போர் அடங்கலாக யாவரிற்கும் கிடைக்க வழியேற்படுத்தல்.மற்றும் அவர்களை பயிற்றுவித்தல்.

- தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுப்பாட்டுச் சபையின் கண்காணிப்பின் கீழ் மதுபாவனை குறித்த சட்ட விதிகள் மீறப்படும் போது பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு அவற்றை உரிய இடத்தில் முறையிடுவதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

- அரசாங்கத்தின் வெளிக்கள வலைப்பின்னல் அமைப்புகள்,அலுவலர்கள் மூலம் பொதுமக்களிற்கு மதுபான வகைகள் பாவிப்பதை குறித்து ஊக்கமளிக்கும் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- குடிப்பதை குறித்தும் அதன்பின் ஏற்படுகின்ற நடத்தை மாற்றங்கள் குறித்தும் பொதுமக்கள் கொண்டிருக்கின்ற போலி நம்பிக்கைகளை இல்லாது செய்து அதனால் ஏற்படுகின்ற சமூக விரோத செயல்கள் குறித்து அறிவூட்டல்.

- சமூகத்தால் அங்கீரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மதுபாவிக்கும் சம்பவங்களான திருமண வைபவம், மரண வீடுகள் போன்ற சமூக செயற்பாடுகளில் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான அறிவூட்டல்களை அரச பணியாளர்களான, ஆரம்ப சுகாதார உத்தியோகத்தர்கள் மூலமாக மேற்கொள்ளுதல்.

- மதுபாவனைக்கு உட்பட்டுள்ள எல்லா மட்டத்தினரையும் அவற்றை குறைத்து நிறுத்துவதற்கு எப்போதும் ஊக்குவித்தல்.

- மதுபாவனையற்ற சமூகத்தை உருவாக்கும் நல்நோக்கோடு உள்ளூர் சட்டங்களை, உள்ளூராட்சி அமைப்புகள் மூலமாக ஏற்படுத்தி அவற்றை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தல்.

- சமூக மட்டத்தில் மது பாவிக்கும் குடும்பங்களை உள்ளடக்கிய கழகங்களை உருவாக்கி அதன் மூலமாக மதுபாவனையால் ஏற்படுகின்ற தீவினைகள் குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## 6.7 தகவல் சேகரித்தல், கண்காணித்தல், மதிப்பீடு, ஆராய்ச்சி

**<u>மூலோபாயம்</u>: மதுபாவனையற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் மதுபாவனை குறித்த தகவல் சேகரித்தல், கண்காணித்தல், மதிப்பீடு, ஆராய்ச்சி என்பவற்றை முறைப்படுத்துதல்.**

- மதுபானங்களின் விற்பனையில் உள்ள எல்லா வகைகள், அவற்றின் விலைகள் என்பவற்றை கிரமமாக பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- மதுபானவகைகளின் கொள்ளளவு, இறக்குமதி, ஏற்றுமதி, வருமானம் என்பன குறித்த தகவல்களை அரச அமைப்புகள் மூலமாக பெற்றுக்கொள்வதோடு அவற்றை பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் ஆய்வாளர்கள் அவற்றை பெற்றுக்கொள்ளும் வகையில் நெறிப்படுத்தல்.

- மதுபாவனையால் ஏற்படுகின்ற விபத்துக்கள், வன்முறைகள், ஈரல்கருகல் நோய், தற்கொலை மரணங்கள், தற்கொலை முயற்சிகள் என்பன குறித்த தகவல்களை உரிய நேரத்தில் கண்காணித்து சேகரித்துக் கொள்ளுதல்.மற்றும் அறிக்கை சமர்பித்தல்.

- நாட்டின் பொருளாதாரத்திற்கு மதுபாவனையில் கிடைக்கின்ற இலாபம் அத்துடன் அதன் தீவினைகளால் ஏற்படுகின்ற செலவு அடங்களாக நிகர பொருளாதார நன்மைகள் என்னவென்பதை கண்டறிய ஆராய்ச்சிகளை நடாத்துதல்.

- மதுபாவனை குறித்து ஆய்வு அமைப்புகள், அரச ஆய்வு மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சிகளை மெருகூட்ட படிமுறைகளை ஏற்படுத்துதல்.

- இலங்கைக்கான மதுபாவனை கட்டுப்பாட்டுக் கொள்கை அமுலாக்கத்தின் போது உலக வர்த்தகம், ஏனைய உடன்படிக்கைகள் என்பவற்றால் ஏற்படும் பாதிப்புகளை தொடர்ச்சியாக கண்காணித்தல்.

## 6.8 புனர்வாழ்வு அளித்தல், ஆதரவளிக்கும் பொறிமுறைகளை வலுப்படுத்தல்

**மூலோபாயம்: மதுபாவனையில் ஏற்படுகின்ற தீவினைகள் குறித்து தனிநபர், குடும்பம். சமூகம், தேசிய அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சுகாதாரத் துறை அதன் கீழ் உள்ள வெவ்வேறு பிரிவுகளை பயனுடைய முறையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

- மதுபாவனையால் பாதிக்கப்பட்டு பல்வேறு உடல், உள பிரச்சினைகளுடன் இருக்கின்ற நபர்களை இனம் காணுதல், அவர்களை உரிய சிகிச்சைக்கு அனுப்புதல் என்பவற்றுக்கு ஆரம்ப சுகாதார உத்தியோகஸ்தர்கள் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதோடு, மதுபாவனையை ஆரம்பிக்க முயல்வோரையும்,மற்றும் சமூக செல்வாக்கு செலுத்தும் காரணிகளையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் மது பாவிக்கும் நபர்களிற்கான உதவிகள் கிடைக்கும் வழிமுறைகள் மீள் பரிசீலனை செய்து அதன் தரமான சேவைகள், கிடைக்கும் வழிமுறைகள், பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் குறித்த தகவல்களுடன் அவற்றை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதன் மூலம் தற்போதைய சேவைகளை பூர்த்திசெய்தல்.

- மது பாவிப்பவர்களிற்கான உடனடி இடையீடுகளை மேற்கொள்ளும் விதமாகவும் ஆரம்ப பராமரிப்பு மேற்கொள்ளும் விதமாகவும் ஆரம்ப பராமரிப்பு நிலையங்கள் சமூக வலையமைப்புகள் ஊடாக நிகழ்ச்சி திட்டங்களை மேற்கொள்ளுதல்.

- மதுபாவனையில் ஏற்படுகின்ற உளநோய்கள், பாலியல் நோய்கள், காச நோய் என்பவற்றை கண்டறிவதற்கான பொறிமுறைகளை ஏற்படுத்தி அவற்றை நல்லமுறையில் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துதல்.

- "மதுபாவனையாளர்களிற்கான புனர்வாழ்வு நிலையத்தின்" வினைத்திறனான மற்றும் செலவு குறைந்த புனர்வாழ்வு செயற்பாடுகளையும் மதுபாவனையில் ஏற்படுகின்ற எல்லாவிதமான பிரச்சினைகளையும் கையாள்வதற்கு ஏற்ற சமூக, சூழல் நடைமுறை ரீதியான அணுகுமுறையுள்ள நிலையங்களை நாடுமுழுவதும் விரிவாக்கம் செய்தல்.

**6.9 மது உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளை கட்டுப்படுத்தல்**

**<u>மூலோபாயம்</u> : அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் மதுபாவனை தொடர்பான கொள்கை அமுலாக்கத்திலும் நடைமுறைப்படுத்துவதிலும் மது உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளை கட்டுப்படுத்தல்**

- மதுபான உற்பத்தி நிறுவனங்களுடன் அரச அதிகாரிகள் அநாவசியமாக சேர்ந்து இயங்குவதை கட்டுப்படுத்துவதுடன் அதிகாரிகள் அரசாங்கத்தின் மதுபான உற்பத்திகள் தொடர்பான தகவல்களை மட்டும் ஒழுங்கமைக்கப்பட்ட முகாமைத்துவக் கட்டமைப்புகளுடன் வழங்குபவர்களாக செயற்படுவதை உறுதிப்படுத்தல்.

- மேற்குறிப்பிட்டுள்ள விடயத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தல்.

- அரச, அரச சார்பற்ற துறைகளில் மதுபான உற்பத்தி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தங்கள் தனிப்பட்ட நன்மைக்காக முரண்படுவதை தவிர்ப்பதற்கான பயனளிக்கக்கூடிய செயற்திட்டங்களை உருவாக்குதல்.

- மதுபாவனை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்கள், ஆய்வாளர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ மது உற்பத்தி நிறுவனங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதை தடுப்பதற்கான சாத்தியமான செயற்பாடுகளை இக்கொள்கைதிட்டதிற்கு முரணாகாமல் நடைபெறுவதை உறுதிப்படுத்துதல்.

- மது உற்பத்தி நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்ற எல்லாவிதமான சமூக செயற்பாடுகளையும் (CSR), உடன் அமுலுக்கு வரும் வகையில் தவிர்ப்பதோடு,அவ்வாறான வேலைத்திட்டங்களை அரச, அரசுசாரா, தனியார் அமைப்புகள் மூலம் முன்னெடுத்தல்.

- மது உற்பத்தி நிறுவனங்களால் அனுசரணை செய்யப்பட்டு நடைபெறுகின்ற பொதுச் சுகாதார, கல்வி, வர்த்தகம், இளைஞர் விளையாட்டு துறைகளிற்கான கொடுப்பனவுகளை,முன்னேற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் தவிர்த்துக்கொள்ளுதல் அல்லது தடுத்தல்.

**6.10 நிறுவன ஒழுங்கமைப்பும் நிதி நடவடிக்கைகளும்**

**<u>மூலோபாயம்</u> : சுகாதார அமைச்சின் ஊடாக, எல்லா பொறுப்பு கூறக்கூடிய நிறுவனங்களையும் உள்வாங்கி மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான கொள்கை அமுலாக்கத்தை செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.**

- மது பாவனை கட்டுப்பாடு தொடர்பாக வேலைசெய்கின்ற எல்லா அமைப்புகளையும், ஒரு குடையின் கீழ் சுகாதார அமைச்சு ஒருங்கிணைத்து அவர்களின் உயிர்ப்பான உதவியுடன் விதிமுறைகளை, நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமான பயனுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- தேசிய மது,புகைத்தல் கட்டுப்பாட்டுச் சபை மதுபான கட்டுப்பாடு தொடர்பான கொள்கையை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக அந்நிறுவனத்தை நல்லமுறையில் பலப்படுத்தல்.
- இலங்கையின் சுகாதார அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் எல்லா துறைசார்ந்த அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஆலோசனை சபை ஒன்றை ஆரம்பிப்பதுடன், ஒழுங்கான அவற்றின் பணிகளுக்கான ஆய்வறிக்கைகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பரிசீலனை செய்தல்.

- மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான இக்கொள்கையில் அடக்கப்பட்டுள்ள சரத்துக்களை நடைமுறைப்படுவத்துவதற்கு தேவையான, நீடித்து நிலைக்கக்கூடிய நிதி வழங்களை அரசு மேற்கொள்ளல்.

## 7.ஒருங்கிணைப்புப் பொறிமுறை:

சுகாதார அமைச்சில் உள்ள உளநல பணிப்பாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ்,சுகாதார பணிப்பாளர் நாயகம், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்களின் ஆலோசனைக்கு அமைவாக இக்கொள்கை திட்டம் அமுல்படுத்தும் போது அவற்றை மாகாண, மாவட்ட மட்டங்களில் நிறைவேற்றுவதற்கான செயன்முறையை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் , உளநல வைத்தியர் / மாவட்ட உளநல ஒழுங்கிணைப்பாளர் ஊடாக செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு குழுக்களாக காணப்படுவர்.

சுகாதார அமைச்சு உள்ளடங்களாக, தொழில் அமைச்சு, காவல்துறை, கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, தகவல் தொழிநுட்பம்,மற்றும் விஞ்ஞானம், வரி போன்ற அமைச்சுகளில் உள்ள பொருத்தமான ஆளணியினரை உள்வாங்கி, மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான தேசிய கொள்கையினை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 8.கண்காணித்தல், மதிப்பீடு செய்தல்

மாவட்ட, மாகாண மட்டங்களில் தேசிய மதுபாவனை கட்டுப்பாட்டுக் கொள்கையில் உள்ள சரத்துகளை அமுல்படுத்தி , கண்காணித்து சுய பகுப்பாய்வு செய்து நடைமுறைப்படுத்துவதை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் மாவட்ட உளநல ஒழுங்கிணைப்பாளர் மேற்கொள்வதை, மாகாண சுகாதார பணிப்பாளர் ஒருங்கிணைத்து செயற்படுத்த வேண்டும். அதற்கான தரவுகளை கிரமமாக ஆய்வு செய்து அவற்றிற்கான அறிக்கைகளை மத்திய சுகாதார அமைச்சின், இத்திட்டத்திற்கு நேரடி பொறுப்பான உளநல பணிப்பாளர் கண்காணித்து செயற்படுத்த வேண்டும். தேசிய உளநல பணிப்பாளர் இக்கொள்கையில் உள்ள சரத்துகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கான, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, நீடித்து நிலைக்கக்கூடிய, மிகப்பொருத்தமான மீளாய்வு பொறிமுறைகளை உருவாக்கி, தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுபாட்டுச் சபையுடன் இணைந்து இக்கொள்கைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின், அதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை சரியான முறையில் ஆய்வு செய்து கண்டறிவதற்கு ஏதுவான, பயனுடைய முறைகள் அனைத்தையும் செய்வதற்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

## 9.நீடித்து நிலைக்கக்கூடிய முறையில் மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

01 பொருத்தமான பொறிமுறை மூலம் தரவுகளை சேகரித்தல்.

02 தொடர்ச்சியாக தேசிய மதுபாவனை தொடர்பான செயல் அமர்வுகளை மேற்கொள்ளுதல்.

03 வருடாந்தம் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆய்வு செய்து அதன் பெறுபேறுகளை ஏனையோர் அறியும் வகையில் பொதுசன ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர்தல்.

## 10.மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கை அமுலாக்கம் செய்வதற்கான தேசிய உளநள உப குழு

தேசிய மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கை அமுலாக்கம் செய்வதற்கு தேசிய உளநலக் குழுவிற்குக் கீழாக பின்வரும் துறைகளை உள்ளடக்கிய ஆளணியினரைக் கொண்ட உபகுழுவினைச் சுகாதாரசேவைப் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு ஏற்ப உளநல பணிப்பாளர் ஒருங்கிணைத்து செயற்படுத்துவார்.

1. சுகாதார போஷனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
2. தொழில் துறை மற்றும் நீதி அமைச்சு
3. கல்வி அமைச்சு
4. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார சிறுவர்,இளைஞர் விவகார கலாச்சார அமைச்சு.
5. சமூக சேவைகள்,நலனோம்புகை மற்றும் கால்நடை அமைச்சு.
6. சமய விவகார அமைச்சு.
7. மகளிர் விவகார அமைச்சு
8. விளையாட்டு துறை மற்றும் உல்லாசத்துறை அமைச்சு
9. கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு
10. காவல்துறை திணைக்களம்
11. மதுவரித் திணைக்களம்
12. உளநல நிபுணர்கள், பொது வைத்திய நிபுணர்கள் , சமூக மருந்து நிபுணர்களின் கல்லூரிகள்
13. சனசமூக நிறுவனங்கள்
14. தேசிய அபாய மருந்து கட்டுப்பாடுச்சபை (NDDCB) மற்றும் தேசிய மது புகைத்தல் கட்டுப்பாட்டுச்சபை(NATA).